DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 136/2025**

Prosecution **PW.7**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.சிவக்குமார் | கிராமம் : | |
| தந்தைபெயர் : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை . சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம்வட்டம் மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.சடையன் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கை விரைந்து முடிக்கவேண்டி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.09.2023 ம் தேதி மாயனூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது போது கரூர் GH லிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த விக்னேஷ்வரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று கொண்டு காவல்நிலையக் நிலையக்குற்ற எண.292/2023 இதச பிரிவுகள் 341. 294(பி),324, 506(2) ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (**புகார் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னிட்டு அன்றைய தேதியிலேயேகாலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மனோகரன், பரமசிவம் ஆகியோர்களை விசாரித்து

பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** சாட்சிகள் விக்னேஷ்வரன், சதிஷ்குமார், ஜீவா, பாரதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சம்பவ இடத்தில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை சாட்சிகள் மனோகரன், பரமசிவம் ஆகியோர்களின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். (**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சாட்சிகள் மனோகரன், பரமசிவம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து

**5.** இவ்வழக்கின் எதிரிகள் கவிதாஷ், திவாகர் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். அ.சா.1 , அ.சா.3, அ.சா.4 ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த கரூர் டாக்டர் . சிவராமன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழைப் பெற்றுள்ளார். (**விக்னேஷ்வரன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (சதிஷ்குமார் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (ஜீவா என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**6. (விக்னேஷ்வரன் என்பவரின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (சதிஷ்குமார் என்பவரின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ( ஜீவா என்பவரின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மருத்துவரின் அறிக்கையில் இருந்து அ.சா.4 ஜீவாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இதச பிரிவுகள் 341, 294(பி),324, 506(2) இதிலிருந்து இதச பிரிவுகள்341, 294(பி), 324,326, 506(2) சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட கத்தி ஒன்றை நீதிமன்றத்திற்கு படிவம் −91ன் மூலம் அனுப்பிவைத்துள்ளார். (**படிவம் −91 அ.சா.ஆ.20 ஆக குறியிடு செய்யப்படுகிறது.) (சுமார் 31 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) எதிரிகளை மீது புலன் விசாரணை முடித்து 05.04.2025 அன்று இதச பிரிவுகள் 341, 294(பி), 324,326, 506(2) ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கின் சான்றுப்பொருட்கள்அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் புகார்தாரரிடமிருந்து பொய்யான புகார் பெறப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறுதிஅறிக்கையில் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.22 10:34:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.